## சுருக்கம்

பணியமைப்பு – தமிழ்நாடு அமைச்சுப்பணி – கூட்டுறவுத் துறை – கருணை அடிப்படையிலான பணிநியமனம் – காலஞ்சென்ற அரசு ஊழியர் ச. சங்கரபாண்டியன், முதுநிலை ஆய்வாளரின் மகள் செல்வி ச. சண்முகப்பிரியா, இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்டது – பணி வரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் (சிஎச்2) துறை

அரசாணை 3(ப) எண். 1 நாள்: 08.01.2019

விளம்பி வருடம்
மார்கழி திங்கள் 24–ஆம் நாள்
திருவள்ளுவர் ஆண்டு 2049

படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, நாள் 01.08.2018.
2. கூட்டுறவுச் சங்கங்களின் கூடுதல் பதிவாளர் (நிதி மற்றும் வங்கியியல்) கடிதம் எண்.29174/2018/பதொ4, நாள் 13.11.2018.

ஆணை:

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யக் கோரும் கருத்துரு குறித்து தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இசைவினை பெறவேண்டிய தேவை இல்லை என ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களின் கூடுதல் பதிவாளரின் கடிதத்தில், திண்டுக்கல் மண்டலத்தில், திண்டுக்கல் சரக துணைப்பதிவாளர் கட்டுப்பாட்டில், அரசுப் பணியிலிருக்கும் போது 31.10.2012 அன்று காலமாகிய முதுநிலை ஆய்வாளர் திரு. ச. சங்கரபாண்டியன் அவர்களின் மகள் செல்வி ச.சண்முகப்பிரியா என்பவர் உரிய கல்வி மற்றும் வயது தகுதிகளைப் பெற்றிருந்ததன் காரணமாக கருணை அடிப்படையில் அரசுப் பணியில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் வழங்கி மதுரை மண்டலத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, மதுரை மண்டல இணைப்பதிவாளர் கட்டுப்பாட்டில் செயல்படும் அலுவலகத்தில் 22.01.2018 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்து பணியாற்றி வருகிறார் என்று கூட்டுறவுச் சங்கங்களின் கூடுதல் பதிவாளர் தெரிவித்துள்ளார்.

3. மேலும், கருணை அடிப்படையில் அரசுப்பணியில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்பட்டு பணியாற்றி வரும் செல்வி ச. சண்முகப்பிரியா, இளநிலை உதவியாளரின் கருணை அடிப்படையிலான பணி நியமனத்தை அவர் பணியில் சேர்ந்த நாளான 22.01.2018 முற்பகல் முதல் வரன்முறை செய்து தக்க ஆணைகள் வழங்குமாறு கூட்டுறவுச் சங்கங்களின் கூடுதல் பதிவாளர் (நிதி மற்றும் வங்கியியல்) அரசைக் கோரியுள்ளார்.

(த.பி.பா)

4. மேற்கூறிய சூழ்நிலையில், மேலே பத்தி 3-ல் உள்ள கூட்டுறவுச் சங்கங்களின் கூடுதல் பதிவாளரின் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்து, ஆய்வுக்குப்பின் செல்வி ச.சண்முகப்பிரியா என்பவருக்கு தமிழ்நாடு அமைச்சுப் பணியில், கூட்டுறவுத் துறையில், மதுரை மண்டல இணைப்பதிவாளர் கட்டுப்பாட்டில் செயல்படும் அலுவலகத்தில் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பதவியில் அவர் பணிநியமனம் செய்யப்பட்ட நாளான 22.01.2018 முற்பகல் முதல் அவர் தேவையான உடல் தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016ல் பிரிவு 28 (1)-ன்கீழ் பணிவரன்முறை செய்து, அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு முன் தேதியிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதால், அவர் ஆண்டு ஊதிய உயர்வுகள் மற்றும் ஊதிய நிலுவை இருப்பின் அவற்றைப் பெற அரசு விதிகளின்படி தகுதியுடையவராகிறார் எனவும் ஆணையிடப்படுகிறது.

5. தனியரின் பணிப்பதிவேட்டில் பணிவரன்முறைப்படுத்தப்பட்ட விவரத்தை பதிவு செய்ய, தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் அறிவுறுத்தப்படுகிறார்.

6. இவ்வாணை, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அலுவல் சார்பற்ற எண்.23947/கியூ2/2018-1, நாள் 03.01.2019 மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்த்திருத்த (ஜி)த் துறை அலுவல் சார்பற்ற எண் 40128/ஜி2/2018, நாள் 12.12.2018-ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

தயானந்த் கட்டாரியா
அரசு முதன்மைச் செயலாளர்.

<u>பெறுநர்</u>

கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர், சென்னை-10.
செல்வி ச. சண்முகப்பிரியா, இளநிலை உதவியாளர்,
(வழி: கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர், சென்னை-10).
முதன்மை மாநிலக் கணக்காயர், சென்னை-18.
மாநிலக் கணக்காயர் (தணிக்கை), சென்னை-18.
மாவட்ட கருவூல அலுவலகம், மதுரை.
மண்டல இணைப்பதிவாளர், மதுரை.

<u>நகல்:</u>

பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் (ஜி) துறை , சென்னை-9.
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ) துறை, சென்னை-9.
இருப்பு கோப்பு/உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

அரசு சார்புச் செயலாளர்
கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர்
பாதுகாப்புத் துறை
தலைமைச் செயலகம், சென்னை.